★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழக நாளிதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✻ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 24-ட வெள்ளி (9—11—56) ☆ வெளியீடு: ஐப்பசி 25: சனி (10—11—56) [இதழ் 130

பி. சி. ஜி. இயக்கம் வளருகிறது

உலகத்திலேயே இந்தியா முதலிடம் பெறுகிறது

சிங்கப்பூர், நவ. 7—

இந்தியாவில் பி. சி. ஜி. இயக்கத்திற்காக ஐ. நா. குழந்தைகள் நிதி நிறுவனம் ரூ. 9,74000 அளித்துள்ளது.

ஆசியாவில் குழந்தைகள் நலத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 120 இலட்சத்தில்தான் இந்தத் தொகை இந்தியாவிற்கு அளிக்கப்படுகிறது.

தாயும் சேயும் ஒன்றுபடும் நாள்-மகிழ்ச்சிக்குரிய திருநாள்!

சிந்திய இரத்தம்--வடித்த கண்ணீர் வீண் போகவில்லை!

தியாகத்தின் பலனே இன்று பெரும் ஆனந்தம்!

திரு-தமிழக இணைப்பு விழாவில்

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் பேருரை

"இன்று உங்களுக்கு வெற்றி விழா; நீங்கள் சிந்திய இரத்தம் —நீங்கள் வடித்த கண்ணீர் —ஏற்றுக்கொண்ட துப்பாக்கிக் குண்டுகள்—உங்களுக்குக் கிடைத்த குண்டாந்தடி அடிகள் யாவும் வீண் போகவில்லை; அவைகளின் பலனே, நீங்கள் இன்று அனுபவிக்கும் மகிழ்ச்சியாகும்.

"தாயும் சேயும் சேருகின்ற இந்த நாள் மறக்க முடியாத ஒரு நாள். தாய்த் தமிழகம், சேயாகிய இப்பகுதிகளை அன்புக் கரங்களை நீட்டி வரவேற்கிறது. தன் அணிகலனும் ஆடையும் இழந்தவளாய், 'தாயுடன் சேர்ந்துவிட்டாலே போதும்' என்ற பேரவா சேய்க்கும், 'தன் சேய் ஆடை அணிகலன்களுடன் இல்லாவிட்டாலும் உயிருடனாவது வந்து சேர்ந்துவிட்டதே' என்ற திருப்தி—உள்ள ஆறுதல், தாய்க்கும் இருந்திடக் காண்கிறோம்.

"பொன்கொழிக்கும் தேவிகுளம்—பீர்மேடு தனித் தமிழர் நாடெனச் சரித்திரம் பகரும் நாடு—கடந்த தேர்தல்களில், 'தாய்த் தமிழகத்துடன்தான் சேருவோம்; நாங்கள் தமிழர்கள்தான்' என்று தனது உரிமையை எடுத்துக் கூறிய நாடு—இன்று பறிபோய்விட்டது. நாம் கேட்டவைகளில், தமிழர்கள் வாழும் பகுதிகளான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின்கரை, செங்கோட்டை, சித்தூர் ஆகியவை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. நாம் கேட்டவை ஒன்பது—கிடைத்தவையோ நாலரை!

"மாநிலப் புனரமைப்புக் குழுவின் மலையாள உறுப்பினரான பணிக்கர்கூட நமக்கு ஐந்து தாலுகாக்கள் அளிக்கச் சிபாரிசு செய்திருந்தார்; ஆனால், நமது சென்னை மந்திரிகளோ, நாலரை தாலுகாக்களுடனேயே திருப்தியடைந்துவிட்டனர்! தாய்த் தமிழகத்தில் ஊர் ஊராக, மாவட்டவாரியாகப் பஞ்சாயத்துக்களும், மாவட்டக் கழகங்களும், சட்டசபைகளுமாகச் சேர்ந்து இந்தத் திரு-தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று கோரி தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், 'மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைப்போம்' என்று மக்களுக்கு உறுதி கூறிவந்த டில்லியில் உள்ள காங்கிரஸ் சர்க்கார், இப்போது மக்களுடைய இந்த மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கைகளை உதறித் தள்ளிவிட்டனர்—புறக்கணித்துவிட்டனர்,"

—இவ்வாறு, கடந்த 2-ந் தேதியன்று, திரு-தமிழகப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைவதையொட்டி காஞ்சி மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் நாகர்கோவில் நகரில் நடைபெற்ற இணைப்பு தின விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

ஐ. நா. படைக்கு 12 நாடுகள் இசைவு

வல்லரசுகள் இடம் பெறுவதற்கு வாய்ப்பு கிடையாது?

நியூயார்க், நவ 8—

எகிப்தில் உருவாக்கப்படவிருக்கும் ஐ. நா. படைக்கு இதுவரையில் 12 நாடுகள் துருப்புகளை அனுப்ப இசைந்துள்ளன. இதற்கு இந்தியா 600 அல்லது 700 பேரை அனுப்பும் என்று டில்லியில் கூறப்படுகிறது.

ஈடன் வலியுறுத்தியுள்ளது போல பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகளுக்கு இந்த போலீஸ் படையில் இடம் அளிக்கப்படமாட்டாது; ரஷ்யாவும் இடம் பெறாது; அமெரிக்காவும் விரும்பவில்லை; ஏனெனில், வல்லரசுகள் ஒன்று சேர்ந்தால் சிக்கல் உருவாகும் என்று கருதப்படுகிறது; எனவே சிறியநாடுகளைக்கொண்டே ஐ. நா. படை அமைக்கப்படும் என்றெல்லாம் கூறப்படுகின்றது.

ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லையாம்!

பிரெஞ்சுப் பிரதமர் கூற்று

பாரீஸ், நவ. 8—

பிரெஞ்சுப் பிரதமர் மோலே இன்று சட்டசபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

பிரான்சோ, பிரிட்டனோ, எகிப்தில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்றும் ஐ. நா. படை உருவாக்கப்படுவதை தாம் வரவேற்பதாகவும் அந்த படைக்குப் பல்வாய்ப் பகுதியை பாதுகாக்கும் என்றும், பிரிட்டனுக்கும்—பிரான்சுக்கும் சென்ற சில தினங்களாக ஏற்பட்ட ஒற்றுமையைப்போல இதுவரை எப்போதும் ஏற்பட்டதில்லை என்றும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈடன் சர்க்கார் மீது கண்டனமாரி

மேலும் ஒரு மந்திரியும் அதிகாரியும் பதவியை வீசி எறிந்தனர்

தொழிற் கட்சியினரின் அறிவுரை

எகிப்தைத் தாக்குவது என்று ஈடன் சர்க்கார் மேற்கொண்ட பொறுப்பற்ற முடிவுக்காக சர்க்காரை வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று, பிரிட்டிஷ் மக்கள்சபையில், தொழிற் கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆயுதபாணியாக எகிப்தை பிரிட்டன் தாக்கியதினால் சர்வதேச நெருக்கடியும், காமன்வெல்த் உறவுகளுக்குப் பங்கமும் ஏற்பட்டிருப்பதாக நேன்றைய பவன் என்ற முன்னாள் வெளி விவகார மந்திரி கண்டன முழக்கமிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர், பிரிட்டிஷ் சர்க்காரின் தகாத போக்கினால் ஏற்பட்டுள்ள விளைவுகளைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

நேரு மீது பாய்ச்சல்!

பவன், ஈடன் சர்க்காரைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது, கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பெரெஸ் போர்டு கிராடாக் என்ற உறுப்பினர் குறுக்கிட்டு, 'நேரு, இந்தியாவின் சார்பில் பிரிட்டனின் போக்கைக் கண்டிப்பதில் ஆச்சரியமில்லை என்று கருதுவோரில் நானும் ஒருவன்; ஐதராபாத், காஷ்மீர், மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளில் எல்லாம் இந்த நேரு என்ன செய்தார்? எப்படி நடந்துகொண்டார்?—என்று கேட்பவர்களில் நானும் ஒருவன். எனவே, நேரு என்ன சொல்கிறார் என்பதற்கு நாம் அதிக முக்கியத்துவம் தருவது தவறு என்றே நான் கருதுகிறேன்' என்று கூறினாராம்.

ஐ. நா.-வுக்குத் தலைவணங்குக!

பவன் தொடர்ந்து பேசுகையில், 'காமன்வெல்த் நாடுகள் அனைத்தும் ஈடன் சர்க்காரின் கொள்கையை எதிர்க்கின்றன. காமன்வெல்த்திலிருந்து பிரிந்து செல்லும் பேச்சு பரவலாகிவருகிறது. மேலும், பாக்தாத் ஒப்பந்த நாடுகள் பிரிட்டனுக்கு எதிராகக் குரல் எழுப்பியிருக்கின்றன; எனவே, இப்போது பிரிட்டிஷ் சர்க்கார் செய்ய வேண்டியதெல்லாம், ஐ. நா. கட்டளைக்குத் தலைவணங்குவதுடன், அது விதிக்கிறபடி துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அமைதி நிலவ வழி செய்யவேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

'அதெல்லாம் முடியாது'

'நாங்கள் செய்வது சரியானதே! எங்கள் நடவடிக்கை தவறானதல்ல என்பதைப் போகப் போகத் தெரிந்துகொள்வீர்கள் - இப்போது தெரியாது; எனவே, ஐ. நா.வுக்குக் கீழ்ப்படிதல், துருப்புகளைத் திரும்பப் பெறுதல் என்பதெல்லாம் முடியாது,' என்று காலனி மந்திரி லென்னாக்ஸ் பாயிட் கூறினாராம்.

ஒரு மந்திரி விலகல்

பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி சர் எட்வர்ட் போயல், பிரதமரின் பொதுஜனத் தொடர்பு அதிகாரியான வில்லியம் கிளார்க் ஆகிய இருவரும், எகிப்தில் பிரிட்டனின் ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்த்துத் தங்களின் பதவிகளை இராஜினாமாச் செய்திருக்கிறார்கள்.

மந்திரி சபையில் பிளவு

பிரிட்டிஷ் மந்திரி சபையில், மத்திய கிழக்குக் கொள்கையை ஒட்டி பிளவு தோன்றியிருப்பதாக லண்டன் பத்திரிகைகள் பலவற்றிலும் பரவலான செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்திகளை உறுதி செய்யும் வகையிலேயே பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி, மற்றும் ஒரு அதிகாரி ஆகியோரின் இராஜினாமாக்கள் அமைந்திருக்கின்றன.

ஈடன் அமெரிக்கா செல்வாராம்!

மந்திரி சபைக் கூட்டம் ஒன்றை முடித்துக்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், சர்வதேச நிலைகளைப் பற்றி விவாதிக்க வாஷிங்டன் செல்வார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

காமன்வெல்த் மாநாடு

மத்திய கிழக்கு நெருக்கடி பற்றி விவாதிக்க, காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு ஒன்று கூடலாம் என்று தெரியவருகிறது.

காமன்வெல்த் உறவுகள்

பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர், மக்கள் சபையில், தீர்மானம் ஒன்றின் மூலம், காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு ஒன்றுகூட வேண்டும் என்று கோரியுள்ளனர் என்று தெரியவருகிறது.

'ஈடன் சர்க்காரின் கொள்கையினால் காமன்வெல்த் நாடுகளின் உறவுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டன,' என்றும் அவர்கள் இடித்துரைத்திருக்கின்றனர்.

'ஆக்கிரமிப்பாளர்கள் எகிப்திலிருந்து வெளியேற வேண்டும்'

ஐ. நா. பொதுச் சபை கட்டளை

நியூயார்க், நவ 7—

'பிரிட்டிஷ் — பிரெஞ்சு—இஸ்ரேல் இராணுவங்கள் எகிப்திலிருந்து உடனடியாகத் திரும்பிவிடவேண்டும்"

என்று ஐ. நா. பொதுச்சபை இன்று ஒருதீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

'உடனடியாக ஐ. நா. போலீஸ் படை வேலையைத் துவக்கவேண்டும்' என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தாமதம் ஏன்?

'ஆக்கிரமிப்பாளரின் துருப்புகள் எகிப்திய எல்லைக்குள்ளிருந்து வெளியேறுவதில் தாமதம் ஏன்? அவை அங்கிருக்க எந்தவித நியாயமும் கிடையாது. ஐ. நா. போலீஸ் படை வரும்வரைகூட அங்கு காத்திருக்கவேண்டுவதில்லை,'

என்று ஒரு பிரதிநிதி தீர்மான விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'நிபந்தனைகள் விதிக்க அதிகாரமேது?'

"ஆக்கிரமிப்பை நடத்தியவர்கள்; தாங்கள் வாபசாவதற்கு நிபந்தனைகளை விதிக்க முடியாது" என்று, இந்தியா சார்பில் வி. கே. கிருஷ்ண மேனன் வலியுறுத்தியுள்ளார்.

ஆக்க மறுப்பு

பிரிட்டிஷ்—பிரெஞ்சு அதிகாரவட்டாரங்கள் எகிப்திலிருந்து துருப்புகளைத் திரும்பப்பெற மறுத்து சண்டித்தனம் செய்து வருவதாகத் தெரிகிறது. எகிப்தில் துருப்புகள் இருப்பதற்கு ஏதேதோ வியாக்கியானங்களைக் கூறுகின்றனவாம் அந்த வட்டாரங்கள்!

இஸ்ரேல் பணிகிறது

இஸ்ரேல் தனது துருப்புக்களை எகிப்திலிருந்து வாபஸ்பெற சம்மதித்ததுடன், ஐ. நா. போலீஸ் படையுடன் ஒத்துழைப்பதாகவும் அறிவித்திருக்கிறது.

பிரிட்டிஷ்—பிரெஞ்சு கூட்டுக்கொள்கை சர்வநாசம்

பிரிட்டிஷ்—பிரெஞ்சு கூட்டுக் கொள்கையும், இராணுவ நடவடிக்கையும் சர்வநாசக் கட்டத்தை நெருங்கி வருவதாகப் பாரிசில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரத்திற்குள் ஐ. நா. போலீஸ்படை தயாராகாவிட்டாலும் இல்லாவிட்டாலும் பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புகள் சைப்ரசிற்குத் துரத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—11—'56 வெள்ளி

நவம்பர் 11

வரும் நவம்பர் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை, தமிழக அமைப்பு நாள் விழாவாகக் கொண்டாடுமாறு நமது பொதுச்செயலாளர் விடுத்துள்ள அறிக்கையைத் தோழர்கள் கண்ணுற்றிருப்பர்.

தமிழகம், தமிழ் மொழி பேசும் மக்களை மட்டுமே கொண்ட மாநிலமாக அமைந்திருப்பது, பொதுவாக அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதே! ஆனால், நமது மகிழ்ச்சி பூரணமாக இருக்கவில்லை—இருக்க முடியாது என்பதை 'குமரி முனையில்........!' விளக்கியிருந்தோம்.

தமிழ் பேசும் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட பகுதிகள்—(தேவிகுளம், பீர்மேடு, கொச்சின்-சித்தூர், பாலக்காடு, செங்கோட்டை முதலியவற்றில் உள்ள தமிழ்ப் பகுதிகள்)—கேரள மாநிலத்திலும், (சித்தூர் மாவட்டப் பகுதிகள்) ஆந்திர மாநிலத்திலுமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. தமிழகம், முழு உருவம் பெறவில்லை.

தமிழ் நாட்டிற்கு, 'தமிழ் நாடு' என்று பெயர் இல்லை; சென்னை - 'மெட்ராஸ்' என்ற பெயரே நீடிக்கிறது; தமிழ் இன்னும் ஆட்சி மொழியாக்கப்படவில்லை.

இந்த நிலைகள், தமிழக அமைப்பினைப் பெரும் விழாவாக, முழு மகிழ்ச்சியோடு தமிழ் மக்கள் கொண்டாடுவதற்கில்லாமல் செய்துவிட்டிருக்கின்றன; என்றாலும், கிடைத்திருக்கும் தமிழக அமைப்பை வரவேற்று மகிழவும், கிடைக்க வேண்டியதை வலியுறுத்திப் பெறவுமாக நவம்பர் 11-ம் நாளை, தமிழக அமைப்பு நாளாகக் கொண்டாடுமாறு நமது பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கேரளத்திலும் ஆந்திரத்திலும் சிக்கிக்கொண்டிருக்கிற தமிழ்ப் பகுதிகள் மீட்கப்பட வேண்டியதின் அவசியத்தையும், தமிழ் நாடு, 'தமிழ் நாடு' என்று அழைக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் அரசியலாருக்கு வற்புறுத்திக் கூறவும், இந்தக் கோரிக்கைகள் தமிழ் மக்கள் அனைவரின் உள்ளத்திலும் பெருக்கெடுக்கும் தமிழ் உணர்ச்சியின் உருவங்கள் என்பதை உணர்த்தவும் கழகத் தோழர்கள், விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

டில்லியின் மாநில புது அமைப்புச் சட்டப்படி மாநிலங்களின் எல்லைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டப்படி அமைந்துள்ள மாநிலங்கள் அனைத்தும் மொழிவழியாக அமையாதனவாக இருக்கலாம். ஆனால், தென்னாட்டைப் பொறுத்து அமைந்துள்ள மாநிலங்கள் நான்கும்—தமிழகம், கேரளம், கருநாடகம், ஆந்திரம் மொழிவழியாக அமைந்திருக்கின்றன. இந்த மாநிலங்களுக்கிடையேயும், இவைகளில் ஒன்றிரண்டிற்கு வடநாட்டு மாநிலங்களுக்குமிடையே சிற்சில எல்லைத் தகராறுகள் இருப்பதும் உண்மை. ஆனால், தென்னாட்டில் திராவிட மொழிகள் வழங்கும் பகுதிகள் நான்கும் மொழிவழி மாநிலங்களாக அமைந்திருக்கின்றன.

'மொழிவழி பிரிந்த இனவழி ஒன்றுபட்ட திராவிட சமதர்மக் கூட்டாட்சி வேண்டும்' என்ற நமது இலட்சியத்தின் முற்பகுதியான மொழிவழி மாநில அமைப்பு ஈடேறியிருக்கிறது; இது, நாம் வெகுவாக மகிழ்வதற்குரியதாகும்.

'திராவிட நாடு' என்று பேசுகிற இவர்களுக்கு திராவிடத்தின் எல்லை தெரியுமா?' என்று இன்னும் சிலர்—ஒரு பெரும் இனமக்களின் விடுதலை, அவர்கள் வாழும் பிரதேசத்தின் எல்லையைக் கொண்டுமட்டுமே நிர்ணயிக்கப்படுப்படுவதுபோல—கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், விடை—தக்க விடை—கிடைத்திருக்கிறது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய திராவிட மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட—வரலாற்றுப் பெருமைமிக்க ஒரு பண்பாட்டின் வழிவந்த திராவிட இனமக்கள் வாழும் திராவிட நாட்டிற்கு இன்று ஒரு எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது—வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளாலேயே! இந்த எல்லை, கூட்டல்-குறைத்தல் போன்ற மாற்றத்திற்கு உட்பட வேண்டியதாயுமிருக்கலாம். ஆனாலும், திராவிடர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகள் இன்று, வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இதுவும், நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியதே!

தமிழக அமைப்பு நாள் விழாவின்போது, கழகத் தோழர்கள் இவற்றை எல்லாம் எடுத்துரைப்பதுடன், திராவிட முன்னேற்றக் கழக இலட்சியம் ஈடேறத் துவங்கியுள்ளதையும் விளக்கிக் காட்டுவர், நவம்பர் 11-ல்!

அதேபோது, தமிழக மக்கள் பெரும் அளவில் பெற்றுவரும் இன உணர்வையும், வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலை வேட்கையையும், இதர திராவிட இன மக்களான ஆந்திரர்—கேரளர்—கன்னடியர் ஆகியோரும் பெறுவதற்காகக் கழகம் மேற்கொண்டு வருவதும்—மேற்கொள்ளவிருப்பதுமான முயற்சிகளையும், தமிழ் மக்களுக்கும் அரசியலாருக்கும் எடுத்துரைப்பர்.

தமிழகம் அமைவதற்காகத் தியாகங்கள் பல புரிந்த வீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திக் கொள்வதின் மூலம், கழகத் தோழர்கள், நவம்பர் 11-ல், தமிழகம் முழு உருப்பெறுவதற்காகவும், தமிழ் நாடு என்று பெயர் பெறுவதற்காகவும், திராவிட நாடு உண்மையான விடுதலை பெற்றுத் திராவிடர்கள் நிரந்தரமான பூரண நல்வாழ்வைப் பெற்றுச் சிறப்புறுவதற்காகவும், எத்தகைய தியாகங்களுக்கும் தங்களை ஒப்படைக்க உறுதி பூணுவர்!

சென்னை மாநிலம்

பரப்பளவில் 11-வது மாகாணமாக அமைகிறது

மூன்றாண்டுகளுக்கு முன் மிகப் பெரிய மாநிலமாக சென்னை இயங்கிற்று.

புதிய மாநில அமைப்பில் சென்னை, நிலப்பரப்பில் 11-வது இடத்தைப் பெற்றுள்ளது.

நீண்ட கடற்கரை கொண்டது சென்னை மாநிலம்.

சென்னை மாகாணத்தில், சென்னையில் ஒரு பெரிய துறைமுகமும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், கடலூர் ஆகியவற்றில் மூன்று சிறிய துறைமுகங்களும் உள்ளன. தனுஷ்கோடியிலும், தூத்துக்குடியிலும் பெரிய துறைமுகங்களை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

சென்னை மாநிலத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 48 கோடியாகும்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நெய்வேலி பகுதியில் ரூ 68 கோடி செலவில் பழுப்பு நிலக்கரி திட்டம் நடைபெறுகிறது.

தோல் பதனிடுதல் சென்னை மாகாணத்தின் தனியுடைமையாகும். இங்கு ஆண்டுதோறும் 28,000 பேல் ஆட்டுத் தோல் பதனிடப்படுகிறது. இதன் மதிப்பு ரூ. 12 கோடி ஆகும்.

சுருட்டும், சிகரெட்டும் சென்னை மாநிலத்தில்தான் அதிகப்படியாகத் தயாராகிறது.

இந்த மாநிலத்தில் 2 20,000 கிலோவாட் மின்சார சக்தி உள்ளது.

இம்மாநிலத்தில் உழவுத் தொழில் முக்கியமானது.

ரூ. 16லட்சம்செலவில்!

திருச்சியில் தொழிற் பண்ணை

திருச்சி மாவட்ட திட்ட போர்டு' கூட்டத்தில், ரூ. 16-இலட்சம் செலவில் திருச்சியில் ஒரு தொழில் பண்ணை துவக்கப்படும் என்ற தகவல் தரப்பட்டுள்ளது.

டில்லியின் நிதி உதவி கிடைக்காததால் இரு நீக்குச்சித் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் கைவிடப்பட்டிருப்பதாகவும், ஆனால், தனிப்பட்டவர்கள் முன்வந்தால் கடனும், மற்ற வசதிகளும் தரப்படுமென்றும் அக்கூட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

8,000 இளைஞர் தலைவர்கள் தயாரிக்கப்படுவார்களாம்

அலகாபாத், நவ. 6—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் பாரத் சேவக் சமாஜம் சுமார் 8,000 இளைஞர் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் என்றும், இவர்கள் தேசப் புனர் நிர்மாண வேலைகளில் ஈடுபடவும், ஒழுங்குமுறை தவறாத குடிமக்களாக வாழவும் இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்காக முகாம்களை நடத்துவர் என்றும், உ. பி. சட்டசபைத் தலைவரும் மாநில பாரத் சேவக் சமாஜத் தலைவருமான எ. ஜி. கெர் என்பார் கூறியிருக்கிறார்.

பஞ்சசீலக் கூட்டுப்பிரகடனம் காற்றில் பறக்கிறதே!

முகாரி பாடிய பண்டித நேருவுக்கு புல்கானின் தரும் வியாக்கியானம்

"எதிர்ப்புரட்சி சக்திகள் நிர்வாகத்தை மேற்கொண்டுவிடக் கூடிய அபாயம் இருந்தபோது தான் ஹங்கேரியில் ரஷ்யா நுழைந்தது,"

என்று, ஹங்கேரியில் ரஷ்யாவின் தெளிவான 'ஆக்கிரமிப்பு'க்கு வியாக்கியானம் தந்து, ரஷ்யப் பிரதமர் புல்கானின், 'பஞ்சசீலக் கூட்டுப் பிரகடனம் காற்றில் பறக்கிறதே' என்று ஓலமிட்ட பண்டித நேருவுக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளாராம்

இதுபற்றி மீண்டும் ஒரு கடிதம் எழுதுவதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்.

சீன உதவி

ஹங்கேரிக்கு சீன சர்க்கார் 3 கோடி ரூபிள்வரை தரத்தயாராயிருப்பதாக சீனப் பிரதமர் சௌ-என்-லாய் அறிவித்திருக்கிறார்.

'மேற்கு உதவியை ஏற்கமாட்டோம்'

'எங்கள் பெருமைக்குப் பங்கம்ஏற்படும் என்பதால், மேற்கு நாடுகளின் உதவியை நாங்கள் ஏற்கத் தயாரில்லை'

என்று ஹங்கேரியப் பிரதமர் அறிவித்திருக்கிறாராம்.

அதிகாரிகளின்

எதேச்சாதிகாரப் போக்கு

சர்க்கார் அதிகாரிகளிடை நிலவும் 'கோட்', 'சூட்' மனப்பான்மையைப் பண்டித நேரு வெகுவாகக் கண்டித்தாராம்!

'பழங்காலப் பிரிட்டிஷ் வழக்கங்கள் ஒழியவேண்டும்' என்றாராம்!

இந்தக் காலத்திலும் இன்னும் சிலர், தங்களை பெரிய அதிகாரிகள் என்ற நினைப்பிலேயே எதேச்சாதிகாரமாக நடந்து வருவதாகவும் நேரு குறிப்பிட்டு, 'இந்தப் போக்கு மாற வேண்டும்' என்று கேட்டுக் கொண்டாராம்!

"வீட்டிலேயோ, வெளியிலேயோ அல்லது அலுவலகத்திலேயோ எங்கிருந்தாலும் அவர்கள், தங்களின் அதிகாரத் தோரணையை விடுவதில்லை; இது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அந்த அதிகாரிகள் இந்தப் போக்கை விடுத்து மக்களோடு ஒன்றிப் பழகும் காலம் வந்துவிட்டது. அதிகாரிகளின் இந்த மனப்போக்கு மாறாவிட்டால், மக்களுடைய ஒத்துழைப்பு அவர்களுக்கு அறவே கிடைக்காது,"

என்றும் பண்டிதர் வற்புறுத்திக் கூறினாராம்!

காங்கிரஸ் அபேட்சகர்கள் பட்டியல் பற்றி முடிவு?

புதுடில்லி, நவ. 8—

பொதுத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களின் பட்டியல்மீது, 1957 - ஜன. 15-ந் தேதி வாக்கில் தான் இறுதியாக முடிவு செய்யப்படுமாம்.

'மார்ச் மாதம் முதலிரண்டு வாரங்களில் தேர்தல் நடைபெறக் கூடும்; அபேட்சைப் பத்திரங்களை ஜனவரி நான்காவது வாரத்தில் தாக்கல் செய்ய வேண்டும்' என்று மத்தியத் தேர்தல் கமிட்டி பிரதேசக் காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருக்கிறதாம்.

ஐ. நா. போலீஸ் படை!

நியூயார்க், நவ. 7—

ஐ. நா. உருவாக்கும் போலீஸ் படையில் சேர்த்துகொள்ள 10-நாடுகள் சம்மதம் தந்திருப்பதாகவும், இந்தியா 700 பேர்களைத் தரச் சம்மதித்திருப்பதாகவும், நியூசிலாந்து 400 பேர் வரை தருமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

புதுவை முன்னேற்றம்

ரூ. 1½ கோடி செலவிடப்படும்

புதுவை, நவ. 5—

வரும் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 1.30,00,000 செலவிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதம ஆணையாளர் கேவல் சிங், புதுவை சட்டசபையில் அறிவித்தார்.

அந்தத் தொகையில் கடல் பாலத் துறைமுகம் கட்டுவதற்கு ரூ. 23½ இலட்சமும், மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 10 இலட்சமும், தேசிய நலத் திட்டத்திற்கு ரூ 4 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

1956—57-ம் ஆண்டு வரவு மதிப்பீடு ரூ 90,08,000; செலவு ரூ. 30 44 900

இந்திய யூனியனில் புதுவைக்கு ஒரு தனி மதிப்பு உண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்துருவத்தில்

முதன் முதல் இறங்கிய விமானம்

இந்த வாரத்தில், தென்துருவத்தில், விமானமொன்று இறங்கியதாம்!

45 வருடங்களுக்குமுன், நாய் இழுக்கும் வண்டி மூலமாகவும் காலில் சரக்குக் கட்டை அணிந்தும் இருவிஞ்ஞானிகள் அங்கு சேர்ந்தபின் முதன்முதலில் இறங்கி, மனிதர்களைத் தென்துருவத்தில் கொண்டு சேர்த்த விமானம் இதுதானாம்!

விமானம், தென்துருவத்தில் 49 நிமிடம் நின்றது; அதன்பின் ஜெட்டின் உதவியால் மேலே கிளம்பியது; அதில் சென்றவர்கள் தாங்கள் இறங்கிய இடத்தில் கொடிகளும், எதிர்காலத்தில் இறங்குவதற்கு உதவி செய்ய ராடார் 'ரெப்லக்டர்'களும்விடுத்து வந்தார்கள்,' என்று கூறப்பட்டுள்ளது.

ரூ. 125இலட்சம் செலவில் சண்டிநல்லா நீர்த்தேக்கம்

சென்னை, நவ. 6—

நீலகிரி மாவட்டத்தில், சண்டிநல்லா ஆற்றின் குறுக்கே அணைகட்டி, நீர்த்தேக்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூ.125 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது; அந்த நீர்த்தேக்கத்திலிருந்து பைகாரா நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் விடப்படும்.

என்ன காரணமோ?

சமாதானத்துக்கான நோபெல் பரிசு, இவ்வருடம் வழங்கப்படமாட்டாதென நோபெல் குழு கூறியுள்ளது; இதற்கான காரணம் என்னவெனக் கூறப்படவில்லை.

கம்யூனிஸ்டுகளின் கூட்டுறவு

இத்தாலி சோஷலிஸ்டு கட்சி துண்டித்துக் கொள்கிறது

இத்தாலி நாட்டு மக்கள் சபையில், கடந்த எட்டாண்டுக் காலமாகக் கம்யூனிஸ்டு கட்சியும் சோஷலிஸ்டு கட்சியும் கூட்டாகச் சேர்ந்தே எதிர்க்கட்சியாக விளங்கிவந்தன; அவைகள் இரண்டும் இணைந்தே எல்லா நடவடிக்கைகளிலும் இதுகாறும் ஈடுபட்டு வந்திருக்கின்றன

ஆனால் ரஷ்யா, ஹங்கேரியின் உள்விவகாரத்தில் தலையிட்டதின் காரணமாக, இந்தக் கூட்டுறவை சோஷலிஸ்டுகள் அறுத்துக்கொண்டிருக்கின்றனர்.

"கென்னியாரின் ஏஜெண்டுகள் தான் எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்; அவர்களை ஒடுக்கப் பார்க்கிறது,' என்று சாக்குக் கூறிக்கொண்டு, ரஷ்யா ஹங்கேரிக்குள் நுழைந்திருப்பது, உண்மையான நோக்கங்களை மறைப்பதற்குத்தான். ஹங்கேரியின் எழுச்சி சுதந்திர எழுச்சியாகும்; அதனை ஒடுக்குவதற்கே ரஷ்யத் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன"

என்று சோஷலிஸ்டு கட்சியின் தலைவரான பியத்ரோ நென்னி என்பார் இத்தாலி நாட்டு மக்கள் சபையில் இடித்துரைத்திருக்கிறார்.

சர்க்காரின் நடவடிக்கைப் பலன் தரவில்லை

அரிசி விலை ஏறிக்கொண்டே இருக்கிறது

சென்னை, நவ. 7—

டில்லி சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கும் பர்மா அரிசியை மக்களுக்கு விநியோகிப்பதற்காக, எத்தனை அதிகமானவைகளைத் திறக்க முடியுமோ அத்தனை அதிகமான நியாயவிலைக் கடைகளைத் திறக்குமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு சிவில் சப்ளை இலாகா கமிஷனர் உத்தரவு பிறப்பித்திருக்கிறாராம்.

சென்னை நகரில் 115 உட்பட இதுவரை மொத்தம் 1,130 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்றும், இன்னும் அதிக கடைகள் திறக்கப்பட்டு அவை மூலம் பர்மா அரிசி விநியோகிக்கப்படுமானால் விலை ஏற்றம் தடுக்கப்பட முடியும் என்றும் சர்க்கார் கூறுகிறது.

ஆனால், சர்க்காரின் இந்த நடவடிக்கைகள் எந்தவிதப் பலனையும் அளிக்கவில்லை என்பதை, படி ஒன்று குறைந்த பட்சம் ரூபாய் ஒன்றுக்குத்தான் கிடைத்து வருகிறது என்பதின் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

சமீப காலத்தில் விலைகள் இறங்கும் என்பதற்கான அறிகுறிகளே தெரியக் காணோம்!

தேர்தலுக்குப் பிறகுதான் நிலச் சீர்திருத்தமாம்!

சென்னை, நவ. 6—

"நிலச் சீர்திருத்தத்தின் 3-வது சட்டம்—அதாவது, நில உடைமைக்கு வரம்பு கட்டும் பிரச்சினை தேர்தலுக்குப் பிறகுதான் கவனிக்கப்படும்" என்று அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

சுசேதா கிருப்ளானி விலகிவிட்டாராம்!

பி. சோ. கட்சி நிர்வாகக் குழு உறுப்பினரான திருமதி சுசேதா கிருபளானி, கட்சியிலிருந்து விலகிவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. பி. சோ. கட்சியை 1952-ல் நிர்மாணித்த உறுப்பினர்களில் அவர் ஒருவராவார்.

'பிளஷ் அவுட்' கக்கூஸ் கட்ட முன்பணமாம்!

சென்னை, நவ 6—

சொந்த வீட்டில் 'பிளஷ் அவுட்' கக்கூசுகள் கட்டுவதற்கு ரூ. 200 கடனாக அளித்து, 40 தவணைகளில் அதனை மீண்டும் வசூலிக்கும் திட்டத்தை சென்னை நகரசபை ஏற்றுள்ளது. இதற்காக சென்னை அரசாங்கம் சென்னை நகரசபைக்கு ரூ. 1-இலட்சம் கடனைத் தந்துள்ளது.

எதிர்காலத்தில்

'ரேடியோ' பெறும் இடம்!

"வருங்காலத்தில் 'ரேடியோ'க்கள் மக்கள் தங்கள் காதுகளில் அணிந்து கொள்ளக்கூடிய அளவு சிறியவையாக இருக்கும்" என்று 'எலக்டிரானிக்' நிபுணர் ஒருவர் உரைக்கிறார்.

"ஒவ்வொரு சிறுவனும் தன் கைகளில் தன் 'ரேடியோ'வை வைத்திருப்பான்; பல அலைகளிலும் ஒலிபரப்பவும், ஒலி கேட்கவும் கூடிய—தூக்கிக்கொண்டு போகத் தகுந்த ஒரே கருவியின் துணையால் மக்கள் எந்தச் சமயத்திலும் ஒருவரோடொருவர் பேச முடியும்" என்று நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

1980-ம் ஆண்டிற்குள், உலகத் தலைவர்கள், ஒரு 'சுவிட்சை'த் தட்டிவிட்டு, விஷயங்களைச் சிக்கலாக்கும் பிரச்சினைகளில் எதுவுமன்றி, மிகவும் உயர்தரமான பேச்சுக்கள் பேசமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரக்கோணம் தாலுகா விவசாயிகள் சங்கக்கூட்டம்

அரக்கோணம், நவ. 7—

இத்திங்கள் 25-ந்தேதியன்று குருவராசபேட்டையில் பாராஞ்சி பிர்க்கா விவசாயிகள் மாநாட்டை நடத்துவதென்றும், இம்மாநாட்டிற்கு சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைப்பதென்றும், கடந்த 4-ந்தேதியன்று இங்கு நடைபெற்ற அரக்கோணம் தாலுகா விவசாயிகள் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்குத் தி மு கழகத் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். அம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகவும் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இந்தக் கூட்டத்தில், சுமார் 40 கிராமங்களிலிருந்து 400-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பள்ளிகள், படிப்பகங்கள், சாலைகள் போன்றவை கட்ட உடனடியாக வேலைகள் துவக்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர்கள் முனுசாமி, கோபால், பி. கன்னையன் ஆகியோர் முறையே மேற்படி மாநாட்டுச் செயலாளர்களாகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந. நி)

ஆர்ப்பாட்டம் செய்த அகதிகள்

கல்கத்தாவில் 600 பேர் கைது

கல்கத்தா, நவ. 7—

மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் இல்லத்தின் முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அகதிகள் 323 - பேர்களை போலீசார் இன்று கைது செய்தனர் என்று தெரிய வருகிறது.

நேற்றும் இது போன்றதொரு ஆர்ப்பாட்டம் நடத்திய 300 - பேரும் கைதாயினராம்!

கைது செய்யப்பட்டவர்களில் ஏராளமான பெண்களும் குழந்தைகளுமிருந்தனராம்.

புதுவை மாநில சர்க்கார் புதிய உத்திரவு

புதுவை மாநிலத்தில், துணி ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் வேலை நிர்ணயம் வாரத்திற்கு 48 மணி நேரமாகுமென, சர்க்கார் பிறப்பித்த உத்தரவு கூறுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய இரயில்வேக்கள் 1955—56-ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து மொத்தம் சுமார் ரூ. 15,68 00,000 மதிப்புள்ள சாமான்கள் வாங்கினர்; அதே ஆண்டில் மொத்தம் சுமார் ரூ. 99 57.00,000 பெறுமானமுள்ள சாமான்களை இந்தியாவில் வாங்கியிருக்கின்றனர்.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :	ரூ. அ. பை
7—11—56 இதழ்ப்படி	1,276—10—3
சென்னை கோகலே மண்டபச் சிறப்புக் கூட்டம் (தலைமைக் கழகச் சார்பில்)	234—8—0
சென்னை 41-வது வட்ட தி. மு. கழகம் அண்ணா அவர்கள் மூலம்	101—0—0
மதுரை மாவட்டச் சுற்றுப்பயணத்தில் பொதுச் செயலாளர் மூலம் வசூல்	52-10—0
மலேயா தோழர் அன்பழகன் மூலம்	36—7—0
தியாகராசன், பொய்யாண்டார்கோட்டை	31—0—0
தர்மபுரி டி. நடராசன்	27-12—0
குறள்நெறி நாடக மன்றம் இராயப்பேட்டை	25—0—0
அந்தமான் தோழர் இராமச்சந்திரன்	15-15—0
சிங்கப்பூர் தோழர் சி. சிங்காரம்	15—0—0
வீரசோழகம் குஞ்சிதபாதம்	10—0—0
கண்டாச்சிபுரம் கண்ணப்பன்	10—0—0
சிங்கப்பூர் கே. பி. கைலாசம்	10—0—0
கோவை நடராசன்	8—9—0
தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. மூலம்	7-13—0
கடலூர் ஒளியழகன்	7—0—0
பாளையங்கோட்டை ஏ. தங்கையா	5—0—0
துறையூர் தி. மு. கழகத் தோழர் கலியபெருமாள்	5—0—0
தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ. மூலம்	3—0—0
சின்னகாமப்பட்டு ஆர் எஸ் கண்ணன்	1-10—0
பெத்தநாய்க்கன்பாளையம் வி. கே. மாரிமுத்து	1—0—0
ஆக மொத்தம் ரூ.	1,884—14—3

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

கழகச் செய்திகள்

மீஞ்சூர் தி. மு. கழகம்

5—10—56ல் மீஞ்சூர் தி. மு கழக நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. செயலாளர்: என். வி தங்கசாமி; துணைச்செயலாளர்: எஸ். கணேசன்; பொருளாளர்: திராவிடச் செல்வன்; மாவட்டப் பிரதிநிதி: மு கேசவன். 7 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏத்தாப்பூர் தி. மு. கழகம்

20—10—56ல் தோழர் எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ, அவர்கள் முன்னிலையிலும் தோழர் ஓய். எல். கலியமூர்த்தி தலைமையிலும் கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஆர். பூவராகசாமி; துணைச் செயலாளர்: ஆர். பெருமாள்சாமி; பொருளாளர்: ஓய் என். இராமு; மாவட்டப் பிரதிநிதி: ஓய். வி. பரமசிவம். செயற்குழுஉறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புளியால் தி. மு. கழகத் துவக்கம்

14—10—56-ல், தோழர் சுவைக்கின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தி மு. கழகக் கிளை அமைக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: சுப. துரைராசன்; துணைச் செயலாளர்: இரா. சாமிநாதன்; பொருளாளர்: அரு. கணபதி.

சங்கரநயினார்கோயில் தொகுதி தி. மு. கழகக் குழு அமைப்பு

18—10—56 இரவு 9 மணிக்கு சங்கரநயினார்கோயில் தொகுதிக் குழு அமைப்புக் கூட்டம் தோழர் சி. எஸ். பழனியப்பன் இல்லத்தில் தோழர் பி ஏ. கங்காதரன் தலைமையில் நடைபெற்றது. தொகுதிக் குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: டி. ஆர். சுப்பிரமணியம் (சங்கரன்கோவில்); துணைச் செயலாளர்கள்: சி. எஸ். பழனியப்பன் (ச. கோவில்), பு. சேதுராசு (புளியங்குடி); பொருளாளர்: பி. ஏ. கங்காதரன் (புளியங்குடி). மற்றும் 17 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முக்கிய முடிவுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

கருமலை தி. மு. கழகம்

19—10—56ல், கருமலைபிள்ளை விடுதியில், தோழர் லை. முனுசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் அ. மகாலிங்கம், இ. ஐயாப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர் (இலக்குமணபுரி) தி.மு.க.

21—10—56 பகல் 11 மணிக்கு, தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர் மு அரங்கசாமியின் விலகல் கடிதம் ஒப்புக் கொள்ளப்பட்டும், தோழர் எம் கிருட்டிணன் அவர்களின் விலகல் கடிதம் திரும்பப் பெறப்பட்டும், சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'காமன்வெல்த்திலிருந்து வெளியேறுக'!

எதிர்ப்புக் கமிட்டி தீர்மானங்கள்

சென்னை, நவ. 8—

5—11—56 மாலை 6-மணிக்கு சென்னையில் எச். டி. இராசா தலைமையில் காமன்வெல்த் எதிர்ப்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

(1) எகிப்துமீது புத்தச் செயல்களில் பிரிட்டனும், பிரான்சும் ஈடுபட்டுள்ளதால், காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற உடனே நடவடிக்கை எடுக்குமாறு பண்டித நேருவுக்குக் கடிதம்எழுதுவது என்றும், ஸ்டர்லிங் நாணய இணைப்பைத் துண்டிக்குமாறு நேருவைக் கோருவதென்றும்தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இந்தியத் துறைமுகங்களிலுள்ள பிரிட்டிஷ். பிரெஞ்சுக் கப்பல்களிலிருந்து சாமான்களை இறக்கவோ, அவற்றில் சாமான்களை ஏற்றவோ வேண்டாம் என்று, தொழிலாளர்களை இக்கமிட்டி கேட்டுக் கொண்டும், நவம்பர் 18-ந்தேதியன்று சர்வகட்சி அடிப்படையில் எல்லா ஊர்களிலும் காமன்வெல்த் எதிர்ப்பு தினம் அனுஷ்டித்து ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் நடத்தி எகிப்து மீது ஏற்பட்ட ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதெனவும், பல கட்சிப் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு காமன்வெல்த் எதிர்ப்பு மாநாட்டுக்குத் தேதியை நிர்ணயிக்கத் தலைவருக்குக் கமிட்டி அதிகாரம் தரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வி. சிவப்பிரகாசம்—பரமேஸ்வரி



சேலம் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் பி.ஏ. பி.எல். அவர்களுக்கும், திருவீழிமிழலை கிராம முன்சீப் திரு ஏ. ஆர். எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் குமாரி பரமேசுவரிக்கும் 26—10—56 காலை 10-மணியளவில், அண்ணா அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தி. மு. கழகத் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கருணாநந்தம், க. இராசாராமன், 'சுதந்திரம்' ஆசிரியர் கே. அருணாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இறுதியில் மணமகன் நன்றி கூறினார். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்தன. குழிக்கரை பிச்சையப்பா குழுவினரின் நாதசுவர இன்னிசை நடைபெற்றது.

ஆக்கிரமிப்பாளர்கள்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யுத்தம் நீடிக்கிறது

பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புக்கள், போர்ட்செயிட், மற்றும் எகிப்திய நகரங்களில் குண்டுமாரி பொழிவதாகவும், தாக்குதலைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருப்பதாகவும் எகிப்திய வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.

ஐ. நா. அதிகாரி வருகை

ஐ. நா. இராணுவ அதிகாரியான மேஜர்-ஜெனரல் எடிசர் பர்ன்ஸ் என்பவர் கெய்ரோ வந்துள்ளதாகவும், அவர் ஐ. நா. போலீஸ் படை வேலை செய்வதற்கான வழிமுறைகளை வகுப்பார் என்றும் கூறப்படுகிறது.

செஞ்சின எச்சரிக்கை

பீகிங், நவ. 8—

'எகிப்து தாக்கப்படும்போது நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது'

என்று, செஞ்சின சர்க்கார், மேற்கு வல்லரசுகளுக்கு எச்சரிக்கை ஒன்று அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

எகிப்தின் புகார்

ஆங்கிலோ—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், போர் நிறுத்தம் செய்து விட்டதாகக் கூறிக்கொண்டே தொடர்ந்து தங்களின் இராணுவத் தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பதாக எகிப்திய வெளி விவகார மந்திரி டாக்டர் முகம்மது பௌஸி ஐ. நா. சபையில் புகார் செய்திருக்கிறார்.

பாக்தாத் நாடுகள் கோரிக்கை

பிரிட்டனுடன் பாக்தாத் ஒப்பந்தத்தில் கூட்டுச் சேர்ந்துள்ள துருக்கி, பாகிஸ்தான், ஈராக், ஈரான் நாடுகள் தெஹ்ரானில் கூடி, பிரிட்டனும்—பிரான்சும் எகிப்தில் போரை நிறுத்துவதுடன், துருப்புகளை வாபஸ் பெற வேண்டும் என்றும், எகிப்தின் சுதந்திரம், சுய ஆதிபத்திய உரிமை, கௌரவம் ஆகியவற்றை மதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளன.

'சிக்கலை உண்டாக்கும்'

ஐ. நா. தலைவர் அறிவிப்பு

நியூயார்க், நவ. 8—

"1949 பாலஸ்தீன போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியிருப்பது பெரிய சிக்கலை உண்டாக்கக்கூடியதாகும்" என்று ஐ. நா. செயலாளர் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் அறிவித்துள்ளார்.

அமெரிக்க முப்படைகள்

எந்த நெருக்கடியையும் சமாளிக்க உஷாராக்கப்பட்டிருக்கின்றன?

நியூயார்க், நவ. 8—

அமெரிக்க இராணுவம்—கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகிய முப்படைகளும் உஷார் படுத்தப்பட்டிருக்கின்றனவாம்!

பாதுகாப்புக்காகவே இந்த உஷார் நடைபெறுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

முப்படைகளுக்கான கூட்டுத் தளபதி, பல்வேறு இராணுவ அதிகாரிகளுடனும் தினம் இருமுறை கூடிப் பேசி வருகிறாராம், எல்லாப் படைகளும் எந்த நிமிடத்திலும், எந்த ஒரு நெருக்கடியையும் சமாளிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு என்றும் அந்த அதிகாரிகள் கூறியிருக்கின்றனராம்.

புழலேரி நீர்மட்டம்

சென்னை, நவ. 8—

புழலேரியில் 45.45 அடி தண்ணீர் நிரம்பியுள்ளதாம்; ஏரி பூராவும் நிரம்புவதற்கு இன்னும் 3 அடி நீர் பாக்கியுள்ளதாம்.

தமிழக அமைப்பு நாள் விழாக் கூட்டங்கள்

☆

சென்னை :

11—11—56 மாலை 5 மணிக்கு சென்னை - பேசின் பாலம் தி. மு. கழகப் பணிமனையில் கோ. சேரன் நகரின் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் ப. வேணுகோபாலன் கொடியேற்றுவார்; தோழர்கள் அ. பொ. அரசு, எம். ஏ. கரிகாலன் சொற்பொழிவாற்றுவர்.

* * *

11—11—56 காலை 9 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தில் தோழர் நி. க. சாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர். சிறுவர்க்கு இனிப்புகள் வழங்கப்படும்.

புதுவை :

11—11—56 காலை 9 மணிக்கு புதுவை அம்பலத்தாடுஜயர் மடத்து வீதி, எண். 33, திருக்கலியாண நிலையத்தில், தோழர் ச. செல்வப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, செ. கோவிந்தராசன், போ. பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

போளிப்பாக்கம் :

12—11—56 மாலை 6 மணிக்கு போளிப்பாக்கம் சாவடிக்கருகில் தோழர் பி. குப்புசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. எல். சி. கிருட்டிணசாமி, வே. அ. இளஞ்செழியன் சொற்பொழிவாற்றுவர்.

இளையனார்குப்பத்தில் தி. மு. க. துவக்க விழா

12—11—56 மாலை 5 மணிக்கு திருக்கழுக்குன்றம் — இளையனார் குப்பத்தில், தோழர் கே. ஈ. சம்பந்தம் தலைமையில், தி. மு. க. துவக்க விழா நடைபெறும்; தோழர் டி. ஏ. சண்முகம் கொடியேற்றிவைப்பார்; தோழர் ஜே. ஏ. வகாப், கே. வி. கே. சாமி படிப்பகத்தைத் திறந்துவைப்பார்; தோழியர் அருண்மொழி, தோழர்கள் ஏ. கே. வில்வம், டி. ஏ. வஸ். பாலன், க. குருசாமி, வி. இராகவன், டி. சிதாபதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திண்டுக்கல் சவுந்திரபாண்டியனுர் நினைவு மன்றத் துவக்கம்

11—11—56 மாலை 6 மணிக்கு, திண்டுக்கல் வ. உ. சி. திடலில் தோழர் என். முத்து தலைமையில் மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெறும். தோழர் எ. சுப்பையா கொடியேற்றுவார்; தோழர் க. வேலாயுதனுர் விழாவைத் துவக்கிவைப்பார்; தோழர் வி. சமதர்மம் சௌந்திரபாண்டியனுர் உருவப் படத்தைத் திறந்துவைப்பார்; தோழர்கள் ப. நாராயணன், வி. எல். வி. இராசன் சொற்பொழிவாற்றுவர்.

தேர்தல் நிதிக் கூட்டங்கள்

☆

அண்ணு

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

*

10-11-56 காலை 9-மணிக்கு—அண்ணமலை நகரில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

10-11-56 மாலை 6-மணிக்கு தஞ்சையில் பொதுக்கூட்டம்—நகர தி. மு. கழகம்.

11-11-56 காலை—திருச்சியில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

சென்னை, நவ. 8—

சென்னை நகர் நிறுத்தி கமார் 200 லாரி... புகார் வாகியுள்ளதாம்!

திருச்சி மாணவர் கிளை துவக்க விழா

அண்ணு கலந்துகொள்வார்

11—11—56 காலை 9 மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில் தோழர் அ. நடராசன் தலைமையில் திருச்சி தி. மு. கழக மாணவர் கிளை 4-ம் ஆண்டுத் துவக்க விழா நடைபெறும்.

அண்ணு அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் அன்பில் தருமலிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். அண்ணு அவர்களிடம் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

கொரநாட்டுக்கருப்பூரில் அண்ணு நிகழ்ச்சிகள்

12—11—56 காலை 11 மணியளவில் கொரநாட்டுக்கருப்பூரில் அண்ணு அவர்களால் தி. மு. கழகக் கொடியேற்றிவைக்கப்படும்.

மேலத்தெரு தி. மு. கழகக் கட்டடத் துவக்க விழா தோழர் கோ. பொன்னுசாமி தலைமையில் நடைபெறும். அண்ணு, தோழர் கே. கே. நீலமேகம் சொற்பொழிவாற்றுவர்.

குடந்தையில் அண்ணு

12—11—56 மாலை 6 மணிக்கு குடந்தை அரண்மனைத் தோட்டத்தில் தி. மு. க. மாணவர் கிளையின் சார்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டங்கள்

★

காரைக்குடி :
சாந்தி சதுக்கத்தில்
11—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : உ. சீனிவாசன்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
கண்ணதாசன்

★

கள்ளக்குறிச்சி :
வள்ளுவர் திடலில்
11—11—56 மாலை 6-மணிக்கு
தலைவர் : ஜே. எச். பகதூர்
பேசுவோர் :
இரே. இளம்வழுதி
கே. ஜி. சாமிநாதன்
மு. பாண்டியன்

★

சென்னை-வியாசர்பாடி
12—11—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சத்தியவாணிமுத்து

★

காரிக்கல் கிராமம்
விளையாட்டு மைதானத்தில்
10—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : டி. கண்ணன்
பேசுவோர் :
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
வே. அ. இளஞ்செழியன்

★

அர்ச்சுனபுரம்:
அழகிரி அரங்கில்
11—11—56 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : கோ. வேந்தன்
பேசுவோர் :
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
வே. அ. இளஞ்செழியன்
சே. மா. இரங்கசாமி

★

பாகூர் (புதுவை வட்டம்):
11-11-56 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் திறப்பு விழா
தமிழக அமைப்புநாள் விழா
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
சு. பெருமாள்
ச. சிவப்பிரகாசம்
செ. கோவிந்தராசன்
போ. பாண்டியன்

ARUNA

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகளுக்கு :

"11—11—56 மாலை 4 மணிக்கு, பெங்களூர் சிராமபுரம் கிளைக் கழகப் பணிமனையில் பெங்களூர் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். பல முக்கியமான பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்று, பெங்களூர் மாவட்ட செயலாளர் எஸ். வி. பதி அறிவிக்கிறார்.

பரமக்குடி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

11—11—56 இரவு 10 மணிக்கு பரமக்குடி கிளைக் கழகப் பணிமனையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். புதிய நிர்வாகிகள் தேர்தல், கழக ஆண்டு விழா நடத்துதல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை—சைதாப்பேட்டை தி.மு.க. உறுப்பினர்கட்கு

11—11—56 மாலை 6 மணிக்கு சடையப்ப முதலி தெரு, எண் 2, மேல் மாடியில் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர் தேர்தல் நடைபெறும்.

சென்னை-34-வது வட்ட தி. மு.க. பொது உறுப்பினர்கட்கு

11—11—56 மாலை 9 மணிக்கு எண் 31-எ., வில்லேஜ் ரோடில், தோழர் பாலசுந்தரனுர் இல்ல மாடியில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தோழர் இளம்பரிதி முன்னிலையில் கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். ஆண்டு வரவு-செலவு, பொதுத் தேர்தல் குறித்த ஆலோசனைகளும் நடைபெறும்.

திருமணம்

12-11-56 காலை 9-15 மணிக்கு மேல், தோழர் தங்கராசு—தோழியர் இந்திரா; தோழர் சந்திரகாசன்—தோழியர் தமிழரசி திருமணங்கள், குடந்தை கும்பேஸ்வரர் மேல வீதியிலுள்ள திரு. எஸ். பெரியசாமி இல்லத்தில் தோழர் வி. வி. இராமசாமி தலைமையில் நடைபெறும். அண்ணு அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

சென்னை சிம்சன் குருப் கம்பெனி தி.மு.க. தேர்தல் நிதிச் செயற் குழு

"11—11—56 காலை 9 மணிக்கு சென்னை 29-வது வட்டம் கழகப் பணிமனையில் (31, வாலர்ஸ் ரோட்) சிம்சன் குருப் கம்பெனி தி. மு. க. தேர்தல் நிதி செயற்குழுக் கூட்டம் நடைபெறும். மத்தியச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று மேற்படி தேர்தல் நிதிக் குழுச் செயலாளர் தோழர் வா. சி. கோவிந்தராசன் அறிவிக்கிறார்.

'உரிமைக் குரல்'—நாடகம்

சந்திரன்கருப்பூர் துவக்கப்பள்ளி கட்டட நிதிக்காக கொரநாட்டுக் கருப்பூரிலுள்ள கே. ஆர். எம். சிங்காரம் செட்டியார் தோட்டத்தில் அமைந்திருக்கும் கே. வி. கே. சாமி கலை அரங்கில், கலைவாணர் நாடக மன்றத்தினரின் 'உரிமைக் குரல்' நாடகம், 11—11—56 இரவு 10-மணிக்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையிலும், 12—11—56 இரவு 10-30 மணிக்கு அண்ணு அவர்கள் தலைமையிலும் நடைபெறும்.

நீத்தார் வழிபாடு

11—11—56 காலை 9 மணிக்கு, சென்னை - மூலக்கொத்தளம் இடுகாட்டில், 25—10—56ல் உயிர் நீத்த தோழர் ஆர். அங்கமுத்து அவர்களுடைய சமாதியில் திரு. மயிலை - சிவ. முத்து அவர்கள் தலைமையில் நீத்தார் வழிபாடு நடைபெறும். மாலை 6 மணிக்கு, அண்ணபிள்ளைத் தெரு, பிரம்மய ஜய பள்ளியில் மாணவர் மன்றச் சார்பில் இரங்கற் கூட்டமும் நடைபெறும். சென்னை நகராண்மைக் கழகத் துணை ஆணையாளர் என். சங்கரன் அவர்கள் திரு. அங்கமுத்துவின் உருவப்படத்தைத் திறந்துவைப்பார். திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர், சி. எஸ். நடேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.